தொகுத்தறி மதிப்பீடு : மாதிரி வினாத்தாள்

9ஆம் வகுப்பு 2ஆம் பருவம் – தமிழ் முதல் தாள்

காலம் : 2.00 மணி மதிப்பெண்: 60

அ.உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)

1.பொருத்தமான விடையைத் தேர்க.
அ.சிறுபஞ்சமூலம் – 1.காப்பிய இலக்கியம்
ஆ.குடும்ப விளக்கு – 2.சங்க இலக்கியம்
இ.சீவசிந்தாமணி – 3.அறஇலக்கியம்
ஈ.குறுந்தொகை – 4.தற்கால இலக்கியம்
1)அ–3, ஆ–4, இ–1, ஈ–2 2)அ–2, ஆ–3, இ–1, ஈ–4
3)அ–3, ஆ–1, இ–4, ஈ–2 4)அ–4, ஆ–1, இ–2, ஈ–3

2.பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று----
அ.மாமல்லபுரம் ஆ.பிள்ளையார் பட்டி இ.திரிபுவனவீரேசுவரம்
ஈ.தாடிக் கொம்பு

3.'யவனப் பிரியா' என்பது எதனைக் குறிக்கும்?
அ.மிளகு ஆ.முத்து இ.சங்கு ஈ.தந்தம்

4.அஃகசாலை என்பது ---------த்தைக் குறிக்கும்
அ.அங்காடிகள் அமைந்துள்ள இடம் ஆ.யவனர்கள் இருக்கின்ற இடம் இ.நாணயங்கள் அச்சடிக்கும் இடம்
ஈ.அரேபியர்களின் பந்தர் இடம்

5.பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும் நிலப்பகுதி
அ.குறிஞ்சி ஆ.முல்லை இ.நெய்தல் ஈ.பாலை

ஆ.கோடிட்ட இடங்களை நிரப்புக.(5)

6.தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்--------
7.சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் ------------
8.காந்தவுசி பற்றிய செய்தியைக் கூறும் நூல்------
9.------காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம்.
10.பூவையும் குயில்களும் – இதில் பூவை என்பதன் பொருள்--

இ.பொருத்துக. (4)

11.குடும்ப விளக்கு – ஆண்டாள்
12.நாச்சியார் திருமொழி– பாரதிதாசன்
13.இராவண காவியம் – மாங்குடி மருதனார்
14.மதுரைக் காஞ்சி – புலவர் குழந்தை

ஈ.எவையேனும் ஆறனுக்கு விடையளிக்க.(12)

15.சாரதா சட்டம் எதற்காகப் போடப்பட்டது?
16.நடுகல் என்றால் என்ன?
17.தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
18.காரியாசான் குறிப்பு தருக.
19.பண்டைய தமிழகத்திற்கு வணிகத்திற்காக வந்து சென்றோர் யாவர்?
20.நாலு மலை கொண்ட பெருநகரம் – இவ்வடிகளில் குறிக்கப்படும் மலைகள் யாவை?
21."பொறிமயிர் வானம்....கூட்டுறை வயமாப் புலியொடு குழும" – இவ்வடிகள் மூலம் நாம் அறியும் செய்தி யாது?
22.முக்குழல் – பொருள் விளக்கம் தருக.

உ.எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க.(16)

23. சங்க பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
24.அறிவுடையார் தாமே உணர்வர் என்பதை சிறுபஞ்சமூலம் எவ்வாறு விளக்குகிறது?
25."அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்"
அ.இவ்வடிகள் அமைந்த பாடல் இடம்பெறும் நூல் எது?
ஆ.எவை பாடும்?
இ.மைவனம் என்பதன் பொருள் யாது?
ஈ.எவை பறையாய் ஒலிக்கும்?
26. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது ?
27."மாகால் எடுத்த முந்நீர் போல"– இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
28.கொற்கை – சிறுகுறிப்புத் தருக.

ஊ.விரிவான விடையளிக்க.(12)

29. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க. (அல்லது)

குடும்ப விளக்கு நுலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிடுக.

30.இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரி.
(அல்லது)
தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலை நயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

எ.அடிபிறழாமல் எழுதுக. (6)

31.அ.'தலை' என முடியும் குறள்.

ஆ.'பூவாது .... எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடல்

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா, பட்டதாரி ஆசிரியர்-
தமிழ்.ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115

www.Padasalai.Net